(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 151.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2026 மே 21, வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

---

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

746/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை இலங்கையை விட்டு வெளியேறியுள்ள சட்டத்துறை தலைமையதிபதி திணைக்கள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) சட்டத்துறை தலைமையதிபதி திணைக்களத்தில் தற்போது நிலவுகின்ற, விசேட திறமையுள்ள உத்தியோகத்தர்களின் பற்றாக்குறைக் காரணமாக, ஒரு உத்தியோகத்தர் சுமார் 200-300 கோப்புகளைக் கையாளுகிறார் என்பதையும்;

(iii) இதன் காரணமாக ஏற்பட்டுள்ள தாமதத்தைக் குறைப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) சட்டத்துறை தலைமையதிபதி திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

773/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை, வெளிநாடுகளுக்கு தொழில் நிமித்தம் சென்று பல்வேறு இன்னல்களை எதிர்கொண்ட இலங்கை ஊழியர்களின் எண்ணிக்கை நாடுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இவர்களில் தற்போது நாட்டுக்கு மீண்டும் அழைத்துவரப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவ்வாறு இன்னல்களை எதிர்கொள்ளும் ஊழியர்களுக்காக செய்யப்படுகின்ற இடையீடுகள் மற்றும் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

841/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் கொழும்பு, தேசிய கலாபவனம் புனரமைப்புப் பணிகளுக்காக மூடப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி புனரமைப்புப் பணிகள் இதுவரையில் நிறைவடையவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி புனரமைப்புப் பணிகளுக்காக இதுவரையில் செலவிடப்பட்டுள்ள நிதித் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அங்கு வைக்கப்பட்டிருந்த, விலைமதிக்க முடியாத, 42 பழமையான ஓவியங்கள் தற்போது காணாமல் போயுள்ளதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(v) இது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

921/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யுத்தத்தின்போது உயிரிழந்த இராணுவ உறுப்பினர்களின் விதவைகளுக்கு, அந்த இராணுவ உறுப்பினர் உயிரிழந்த நாளிலிருந்து இவர்கள் ஓய்வுபெற வேண்டிய திகதி வரை ஓய்வூதியம் வழங்கப்படுகிறதா;

(ii) மேற்படி ஓய்வுபெறும் திகதிக்குப் பின்னர், அந்த விதவைகளுக்கு மாதாந்த நிலையான கொடுப்பனவு வழங்கப்படுகிறதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) போரின் போது காணாமற்போன இராணுவ உறுப்பினர்களின் விதவைகளுக்கு, அந்த இராணுவ உறுப்பினரின் ஓய்வுபெறும் திகதிக்குப் பின்னர் மாதாந்த நிலையான கொடுப்பனவு வழங்கப்படுகிறதா;

(ii) இல்லையெனில், மரணச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள 'பயங்கரவாதத் தாக்குதல் காரணமாகக் காணாமற்போனமை' என்ற காரணியின் அடிப்படையில் அக்கொடுப்பனவு வழங்கப்படாமல் உள்ளதா;

(iii) அப்படியாயின், அது இராணுவ வீரர்களின் விதவைகளுக்கு இழைக்கப்படும் அநீதி என்பதை அவர் அறிவாரா;

(iv) காணாமற்போயுள்ள காலத்தைக் கருத்திற்கொண்டு, அந்த இராணுவ வீரர்களின் விதவைகளுக்கு மாதாந்த நிலையான கொடுப்பனவை வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகளைச் செய்வதற்கான இயலுமை காணப்படுகின்றதா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1013/2025

கௌரவ ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது நிலுவையில் உள்ள, விசாரணையில் உள்ள, சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்ற மற்றும் தீர்க்கப்பட்ட நிதி தொடர்பான சைபர் குற்ற வழக்குகளின் எண்ணிக்கை மாகாணம் மற்றும் ஆண்டின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) நிதி தொடர்பான சைபர் குற்ற வழக்குகளை விசாரணை செய்து சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு எடுக்கின்ற சராசரிக் காலத்தினையும்;

(iii) நிதி மோசடி தொடர்பாக நிபுணத்துவம் பெற்ற சைபர் குற்றச்செயல் தொடர்பான தனியான புலனாய்வுப் பிரிவுகள் அனைத்து மாகாணங்களிலும் நிறுவப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) நிதி தொடர்பான சைபர் குற்றச்செயல்களை விசாரணை செய்வதற்குச் செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்தி மோசடிகளைக் கண்டுபிடிக்கும் முறைமைகள் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்பதையும்;

(v) நிதி நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்தி மோசடிகளைக் கண்டுபிடிக்கும் முறைமைகள் போன்ற மேம்பட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் உள்ளடங்கலாக, நிதி தொடர்பான சைபர் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1303/2025

கௌரவ எம். எஸ். உதுமாலெப்பை,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்வி வலயங்களுக்கு இணைக்கப்பட்டு பதில் கடமை அடிப்படையில் ஆசிரிய ஆலோசகர்களாகவும் வளவாளர்களாகவும் கடமையாற்றிவரும் உத்தியோகத்தர்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) இந்த உத்தியோகத்தர்களில் கிழக்கு மாகாண கல்விச் செயலாளர், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் கிழக்கு மாகாண வலயக் கல்விப் பணிப்பாளர்களால் பதில் கடமை அடிப்படையில் ஆசிரிய ஆலோசகர்களாகவும் வளவாளர்களாகவும் நியமிக்கப்பட்டவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) நீண்டகாலமாக பதில் கடமை அடிப்படையில் கடமையாற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் வளவாளர்களை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1371/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுரக்ஷா மாணவர் காப்புறுதித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அதன் ஆரம்பகால நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) இக்காப்புறுதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டிலிருந்து இதுவரையில் பயனடைந்த பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி காப்புறுதித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் காப்புறுதி நிறுவனத்தின் பெயர் என்ன என்பதையும்;

(v) அக்காப்புறுதித் திட்டம் தொடர்பான தற்போதைய அரசாங்கத்தின் நிலைப்பாடு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1469/2025

கௌரவ சானக மாதுகொட,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி, பெலிகஹ, புதிய நீதிமன்றக் கட்டிடத்தொகுதி 2024 யூலை 19ஆம் திகதி திறந்துவைக்கப்பட்ட போதிலும் இதுவரை அங்கு வழக்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமைக்கான காரணம் யாது;

(ii) மேற்படி நீதிமன்றக் கட்டிடத்தொகுதியில் வழக்கு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான உத்தேசக் காலப்பகுதி யாது;

(iii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள புதிய கட்டிடத்தொகுதியில் நடவடிக்கைகளை ஆரம்பித்ததன் பின்னர் தற்போது நீதிமன்ற நடவடிக்கைகள் பேணிவரப்படுகின்ற காலி கோட்டை பண்டைய கட்டிடங்களையும் மேற்படி வளவையும் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் நோக்கங்கள் யாவை;

(iv) காலி, பெலிகஹ, புதிய நீதிமன்றக் கட்டிடத்தொகுதியின் கட்டிடங்கயையும் காணியையும் இதுவரை பயன்படுத்தப்படாதுள்ளதன் காரணமாக ஏற்பட்டுள்ள நட்டம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1770/2025

கௌரவ லால் பிரேமநாத்,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேயிலை பயிர்ச் செய்கைக்கான உரமானியம் வழங்கும்போது அறிமுகப்படுத்தப்பட்ட QR குறியீட்டு முறையினூடாக எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் அடையப்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த வெற்றியினை உறுதிப்படுத்தும் தரவுகள் யாவை என்பதையும்;

(iii) தற்போது நடைமுறையிலுள்ள மேற்படி QR குறியீட்டு முறைமையில் காணப்படுகின்ற நடைமுறைச் சிக்கல்கள் யாவை என்பதையும்;

(iv) இந்த முறைமையை நடைமுறைப்படுத்துகின்ற போது எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அடையப்பெறாத சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(v) ஆமெனில், அதற்கான அடிப்படைக் காரணிகள் யாவை என்பதையும்;

(vi) உரத்தைப் பெற்றுக்கொள்கின்ற போது QR குறியீட்டு முறைமை காரணமாக பாதிக்கப்பட்ட தேயிலை பெருந்தோட்டத்துறையினருக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள மாற்று வசதிகள் மற்றும் நிவாரணங்கள் யாவை என்பதையும்;

(vii) QR குறியீட்டு முறைமையை முன்னேற்றுவதற்கோ அல்லது மிகவும் பயனுறுதிமிக்க முறைமையாக முன்னெடுப்பதற்கோ ஏதிர்காலத்தில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளக்கூடிய துரித நடவடிக்கைகள் உள்ளதா என்பதையும்;

(viii) ஆமெனில், அவை யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1771/2025

கௌரவ சுனில் ரத்னசிரி,— கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிராமிய அபிவிருத்தி பணியகத்தின் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய முறுத்தானை கிராம அலுவலர் பிரிவில் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் செயற்படுத்தப் படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை யாவையென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதித்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) தற்போது அக்கருத்திட்டங்களின் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

கௌரவ கபீர் ஹஷீம்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"அல் - ஹாஷிமி சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 மார்ச் 23 ஆம் திகதிய 2481/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.05.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 மார்ச் 31 ஆம் திகதிய 2482/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.05.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 ஏப்ரல் 02 ஆம் திகதிய 2482/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.05.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 1),— 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 37 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 37

2025 இன் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 21302 “வெளியீடுகளை அச்சிடுதல் மற்றும் விற்பனை - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகிறேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 14,500,000,000 இலிருந்து ரூபா. 9,000,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 14,500,000,000 இலிருந்து ரூபா. 5,000,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | ரூபா. 10,000,000,000 இலிருந்து ரூபா. 3,000,000,000 வரை |

(இக்கட்டளை 2025.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2026.04.06 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 2),— 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 38 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 38

2025 இன் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 22302 “களஞ்சியசாலைகள் முற்பணக் கணக்கு (வெடிபொருட்கள்) - இலங்கை கடற்படை” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகிறேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 2,500,000,000 இலிருந்து ரூபா. 800,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 3,000,000,000 இலிருந்து ரூபா. 1,175,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | ரூபா. 700,000,000 இலிருந்து ரூபா. 375,000,000 வரை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை |

(இக்கட்டளை 2025.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2026.04.06 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 3),— 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 39 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 39

2025 இன் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 24702 “கைப்பற்றப்பட்ட தடுத்து வைக்கப்பட்ட பொருட்களுக்கான செலவினங்கள் – இலங்கைச் சுங்கம்” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகிறேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 8,000,000 இலிருந்து ரூபா. 1,500,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2025.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2026.04.06 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 4),— 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 40 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 40

2025 இன் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 25002 “ஏனைய அரசுகள்சார்பான முற்பணக் கொடுப்பனவுகள் - அரச கணக்குகள் திணைக்களம்” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகிறேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 800,000 இலிருந்து ரூபா. 570,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2025.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2026.04.06 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 5),— 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 41 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 41

2025 இன் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 28502 "விவசாய பண்ணைகள் பராமரிப்பு மற்றும் விதை விற்பனைகள் - கமத்தொழிற் திணைக்களம்" இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகிறேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 1,250,000,000 இலிருந்து ரூபா. 1,150,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 1,250,000,000 இலிருந்து ரூபா. 1,150,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2025.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2026.04.06 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 6),— 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 42 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 42

2025 இன் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 30602 “புகையிரதக் களஞ்சியங்கள் முற்பணக் கணக்கு – இலங்கைப் புகையிரதத் திணைக்களம்” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகிறேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 3,000,000,000 இலிருந்து ரூபா. 2,000,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2025.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2026.04.06 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 7),— 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 43 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 43

2025 இன் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 31002 “அரசாங்க தொழிற்சாலைக் களஞ்சிய முற்பணக் கணக்கு – அரசாங்கத் தொழிற்சாலை திணைக்களம்” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகிறேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 120,000,000 இலிருந்து ரூபா. 60,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2025.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2026.04.06 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 8),— 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 44 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 44

2025 இன் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 31003 “அரசாங்க தொழிற்சாலை பணி நிறைவு முற்பணக் கணக்கு – அரசாங்கத் தொழிற்சாலை திணைக்களம்” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகிறேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 450,000,000 இலிருந்து ரூபா. 325,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2025.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

2026.04.06 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 9) ,— 2025 இன் 3 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளைகள் கீழ்க்காணும் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவாறு அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

(இக்கட்டளைகள் 2025.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும். )

**அட்டவணை**

(இத்துடன் இணைக்கப்பட்ட அட்டவணைக்கமைவாக)

## அட்டவணை

## 2025 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளைகள்

2025 ஆம் நிதியாண்டு தொடர்பில் 2025 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரிவு 8 ன் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதன் பிரகாரம், அரசாங்க ஊழியர்களுக்கு முற்பணங்கள் வழங்குவது சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்கள் பற்றிய அட்டவணை.

### குழுக்கட்டளை இலக்கம். 01

2025 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 வது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம், இதனுடன் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படுகின்ற விதத்தில் அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்குகளின் விடய இலக்கங்கள் 00801, 01101, 02101, 10201, 11201, 11601, 13501, 14901, 15101, 17101, 18601, 21901, 22801, 23801, 24301, 24401, 24801, 24901, 25601, 25701, 26201, 26301, 26501, 28001, 28101, 28901, 29001, 29201, 29701, 29901, 30001, 30301, 30701, 31101, 33201 மற்றும் 33801 ஆகியன தொடர்பான அச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் நிரல் II மற்றும் IV என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய வரையறையினைத் திருத்துவதோடு, அதே சட்டத்தின் அவ் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட III ஆம் நிரலில் காணப்படும் ஆகக் குறைந்த வரையறைகளையும் மாற்றுகின்றேன்:-

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | செலவின இல. | II அரசாங்கத்தின் செயற்பாடுகளின் செலவினத்தின் உச்ச எல்லைகள் | | III அரச செயற்பாட்டு வரவிற்கான ஆகக்குறைந்த எல்லைகள் | | IV அரச செயற்பாட்டு பற்று மீதிக்கான உச்ச எல்லைகள் | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | |
| 1. | தேசிய பொலிஸ் ஆணைக்குழு | 00801 | - | - | 4,500,000 | 3,900,000 | - | - | 1 |
| 2. | நிதி ஆணைக்குழு அலுவலகம் | 01101 | - | - | 3,200,000 | 2,800,000 | - | - | 2 |
| 3. | தேசிய கணக்காய்வு அலுவலகம் | 02101 | - | - | - | - | 200,000,000 | 245,000,000 | 3 |
| 4. | நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் | 10201 | 20,000,000 | 20,353,000 | - | - | - | - | 4 |
| 5. | வெளிநாட்டலுவல்கள்,வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் | 11201 | - | - | - | - | 130,000,000 | 170,000,000 | 5 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6. | வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் | 11601 | - | - | 9 ,000,000 | 5,000,000 | - | - | 6 |
| 7. | பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் | 13501 | - | - | - | - | 100,000,000 | 120,000,000 | 7 |
| 8. | கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் | 14901 | 200,000,000 | 200,600,000 | - | - | - | - | 8 |
| 9. | கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் | 15101 | - | - | 8,000,000 | 7,760,000 | - | - | 9 |
| 10. | மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் | 17101 | - | - | 47,000,000 | 40,000,000 | - | - | 10 |
| 11. | டிஜிட்டல் பொருளாதார அமைச்சர் | 18601 | - | - | - | - | 3,500,000 | 9,000,000 | 11 |
| 12. | விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம் | 21901 | - | - | 11,000,000 | 10,711,700 | - | - | 12 |
| 13. | நீதிமன்ற நிர்வாகம் | 22801 | 550,000,000 | 550,737,401 | - | - | - | - | 13 |
| 14. | அரசிறைக் கொள்கைத் திணைக்களம் | 23801 | - | - | 3,000,000 | 2,500,000 | - | - | 14 |
| 15. | அபிவிருத்தி நிதித் திணைக்களம் | 24301 | - | - | 4,000,000 | 3,750,000 | - | - | 15 |
| 16. | வர்த்தக முதலீட்டு கொள்கைத் திணைக்களம் | 24401 | - | - | 3,000,000 | 2,900,000 | - | - | 16 |
| 17. | மதுவரித் திணைக்களம் | 24801 | - | - | 45,000,000 | 41,000,000 | - | - | 17 |
| 18. | திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களம் | 24901 | - | - | 6,000,000 | 5,000,000 | - | - | 18 |
| 19. | மாவட்டச் செயலகம், கம்பஹா | 25601 | - | - | 150,000,000 | 135,000,000 | - | - | 19 |
| 20. | மாவட்டச் செயலகம், களுத்துறை | 25701 | - | - | - | - | 350,000,000 | 372,000,000 | 20 |
| 21. | மாவட்டச் செயலகம், மாத்தறை | 26201 | - | - | - | - | 260,000,000 | 360,000,000 | 21 |
| 22. | மாவட்டச் செயலகம், அம்பாந்தோட்டை | 26301 | - | - | - | - | 250,000,000 | 275,000,000 | 22 |
| 23. | மாவட்டச் செயலகம் / கச்சேரி - மன்னார் | 26501 | - | - | 20,000,000 | 17,500,000 | 80,000,000 | 83,000,000 | 23 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 24. | கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் | 28001 | - | - | 5,000,000 | 3,700,000 | - | - | 24 |
| 25. | கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | 28101 | 350,000,000 | 351,682,850.41 | - | - | - | - | 25 |
| 26. | ஏற்றுமதி கமத்தொழில் திணைக்களம் | 28901 | - | - | 45,000,000 | 40,000,000 | - | - | 26 |
| 27. | கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் திணைக்களம் | 29001 | - | - | 25,000,000 | 24,400,000 | - | - | 27 |
| 28. | கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் | 29201 | - | - | 25,000,000 | 23,000,000 | - | - | 28 |
| 29. | கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் | 29701 | - | - | 6,000,000 | 5,900,000 | - | - | 29 |
| 30. | தேசிய புலமைச்சொத்து இலங்கை அலுவலகம் | 29901 | - | - | 4,000,000 | 3,000,000 | - | - | 30 |
| 31. | உணவு ஆணையாளர் திணைக்களம் | 30001 | - | - | 4,000,000 | 3,100,000 | - | - | 31 |
| 32. | நெசவுக் கைத்தொழில் திணைக்களம் | 30301 | - | - | 5,000,000 | 4,800,000 | - | - | 32 |
| 33. | மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் | 30701 | - | - | 40,000,000 | 35,000,000 | - | - | 33 |
| 34. | தேசிய பௌதீகத் திட்டமிடல் திணைக்களம் | 31101 | - | - | 9,200,000 | 6,700,000 | - | - | 34 |
| 35. | தேசிய சமுதாய நீர்வழங்கல் திணைக்களம் | 33201 | - | - | 12,000,000 | 11,321,006 | - | - | 35 |
| 36. | பொது படுகடன் முகாமைத்துவ அலுவலகம் | 33801 | - | - | - | - | 4,500,000 | 9,500,000 | 36 |

2026.04.06 ஆம் திகதி
கொழும்பு 01.

ஒப்பம்/ அநுர குமார திசாநாயக்க,
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் கீழான தீர்மானம்,— மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் தொடர்பாக 2025.03.10 மற்றும் 2025.03.21 ஆகிய திகதிகளில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் குறித்த விடயங்களை உள்ளடக்கியதான, 2025 ஜூலை 25 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 243ஆம் இலக்க பாராளுமன்ற வெளியீட்டுத் தொடரான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையானது, பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இன் ஏற்பாடுகளுக்கமைய சட்டத்துறை தலைமையதிபதியின் அவதானிப்புக்கள் மற்றும் தேவையான நடவடிக்கைகளுக்காக ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

*14.

பணம் தூய்தாக்கல் தடை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

தொலைத்தொடர்பு அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

நிதி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

தேசிய சூழல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*24.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— "2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

25.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

நிகழ்நிலைக் காப்புச்சட்டம் (இரத்துச் செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

கோதாகொட குணரதன நாஹிமி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

[1] ''சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக'' எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

1.

2000/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அல்லது தொடர்புடைய நகர புத்துயிர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றின் கீழ் தற்போது குடியிருப்பாளர்களைக் கொண்டுள்ள அரசாங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட உயர் மாடி வீட்டுத்தொகுதிகளின் எண்ணிக்கையையும்;

(ii) அத்தகைய வீட்டுத்தொகுதிகளில் பொருத்தப்பட்ட, தற்போது செயலிழந்துள்ள மின்னுயர்த்திகளின் மொத்த எண்ணிக்கையினையும், 2025 ஆம் ஆண்டின் போது ஒரு மின்னுயர்த்தி செயலிழந்திருந்த சராசரி நேரத்தையும்;

(iii) 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளுக்கான மொத்தப் பராமரிப்பு ஒதுக்கீட்டையும் மற்றும் ஒவ்வோர் ஆண்டிலும் உண்மையாகப் பயன்படுத்தப்பட்ட தொகையையும்;

(iv) பாராமரிப்புக்கான ஒப்பந்தங்கள் ஒரு போட்டிப் பெறுகைச் செயன்முறையூடாக வழங்கப்பட்டதா மற்றும் செயலாற்றுகையின்மை காரணமாக அத்தகைய ஏதேனும் ஒப்பந்தங்கள் முடிவுறுத்தப்பட்டதா என்பதையும்;

(v) 2023 ஆம் ஆண்டிலிருந்து சுயாதீனக் கட்டமைப்பு மற்றும் தீயணைப்புப் பாதுகாப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) அவ்வாறெனில், கண்டயறிப்பட்டவைகள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

(vii) நீண்ட காலப்பகுதிக்கு மின்னுயர்த்திகள் செயலிழந்திருக்கும் போது முதியோர் மற்றும் வலது குறைந்தோர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள அவசரகால நடவடிக்கைகள் பற்றியும்;

(viii) ஏதேனும் கட்டிடம் பாதுகாப்பற்றதென்றோ, பகுதியளவில் பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்டுள்ளதென்றோ அல்லது அவசர முதன்மைப் புனரமைப்பு தேவைப்பட்டுள்ளதென்றோ பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

2001/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000 முதல் 2026 ஆம் ஆண்டுகளுக்கிடையில் செயற்படுத்தப்பட்ட தேசிய நிகழ்ச்சித்திட்டமான ‘அதிகமாக உணவுகளை வளர்ப்போம்’ அல்லது அதுபோன்ற கமத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அவை நிர்வகிக்கப்பட்ட அமைச்சுக்கள் அல்லது நிறுவனக் கட்டமைப்புகள் யாவை என்பதையும்;

(ii) அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் ஏற்பட்ட மொத்த பொதுச் செலவினத்தில், உர மானியங்கள், நீர்ப்பாசன விரிவாக்கம், விதை அபிவிருத்தி , விரிவாக்க சேவைகள், சந்தைப்படுத்தல் மற்றும் சேமிப்பு உட்கட்டமைப்புக்கான ஒதுக்கீடுகள் உட்பட ஆண்டுரீதியான செலவினம் எவ்வளவு என்பதையும்;

(iii) இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாகச் சுயாதீனமான செயலாற்றுகைக் கணக்காய்வுகள் அல்லது தாக்க மதிப்பீடுகள் நடத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அத்தகைய அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டுள்ளனவா என்பதையும்;

(v) இந்தக் காலகட்டத்தில் விவசாயிகளின் இலாபமீட்டும்தன்மை, பயிர் செய்யப்பட்ட பரப்பு, ஒரு ஹெக்டேயருக்கான பயிர் விளைச்சல், உற்பத்திச் செலவு மற்றும் மதிப்பிடப்பட்ட அறுவடைக்குப் பிந்திய இழப்புகள் ஆகியவற்றில் காணப்பட்ட போக்குகள் யாவை என்பதையும்;

(vi) உரக் கொள்கை மாற்றங்கள், நீர்ப்பாசனப் பற்றாக்குறைகள், போதுமான களஞ்சிய வசதியின்மை, விநியோகச் சங்கிலித் திறமையின்மைகள், சந்தைச் சிதைவுகள், விலை நிர்ணயத்தில் நிச்சயமற்ற தன்மை, அல்லது கட்டுப்படியான கடனைப் பெறுவதிலுள்ள வரையறுக்கப்பட்ட அணுகல் உள்ளிட்ட கட்டமைப்பு ரீதியான தடைகள், நிலையான இறக்குமதி மாற்றீட்டையும் உள்நாட்டு விவசாய மீள்திறனையும் தடுத்துள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

2002/2026

கௌரவ ரவி கருணாநாயக்க,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மகாவலி அதிகாரசபையினால் அதன் ஆரம்பம் முதல் 2025.12.31 வரை மேற்கொள்ளப்பட்ட மொத்தத் திரண்ட மூலதனச் செலவினம், பாரிய திட்டங்களின் அடிப்படையில் (A, B, C, D, H, L மற்றும் R) வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மகாவலிக் கருத்திட்டம் எந்த ஜனாதிபதியின் நிர்வாகத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு அதன் பின்னர் துரிதப்படுத்தப்பட்டது என்பதையும், அத்தகைய துரிதப்படுத்தல் எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்;

(iii) 2020 முதல் 2025 வரை, நீர்ப்பாசனக் கட்டணங்கள், நீர்மின் விற்பனைகள், காணிக் குத்தகைகள் மற்றும் ஏனைய வணிக செயற்பாடுகளில் இருந்து ஈட்டப்பட்ட வருடாந்த வருமான மூலங்கள் யாவை என்பதைத் வெவ்வேறாகவும்;

(iv) நாணயம், வட்டி விகிதங்கள் மற்றும் கடனை மீளச் செலுத்தும் அட்டவணை விபரங்களைச் சுட்டிக்காட்டி மகாவலிக் கருத்திட்டங்களுடன் தொடர்புடைய நிலுவையிலுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடன்கள் யாவை என்பதையும்;

(v) நீர்ப்பாசனப் பராமரிப்புத் தொடர்பாக ஹெக்டேயர் ஒன்றுக்கான தற்போதைய செலவு யாதென்பதையும்;

(vi) அத்தகைய செலவிற்கும் உண்மையில் மீளப்பெறப்பட்ட பணத்தொகைக்கும் இடையிலான ஒப்பீடு பற்றியும்;

(vii) அண்மையில் ஏதேனும் செயற்திறன் அல்லது விபரமான நுண் கணக்காய்வு நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(viii) அவ்வாறாயின், அத்தகைய அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---